**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE,CHEYYAR**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **SC No. 137/2011** |
| Deposition of witness for | Prosecution **LW – 8 / PW - 8**<br>Defence<br>Court |

Name : **திருமதி. கவிதா, காவல் ஆய்வாளர்**

Husband's Name : திரு. ரமேஷ்

Village : செய்யாறு

Taluk : செய்யாறு

Calling : காவல் ஆய்வாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, செய்யாறு.

Age : 47

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th Day of March 2026.

**(1, 2, 3 எதிரிகள் ஆஜர்.)**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது செய்யாறு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இவ்வழக்கில் வழக்கு பதிவு செய்து சாட்சிகளை விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் திரு. N. வெங்கடேசன் என்பவருடன் பணி செய்த வகையில் அவருடைய கையெழுத்தும் கையொப்பமும் எனக்கு நன்கு தெரியும்.

2. காவல் ஆய்வாளர் வெங்கடேசன் தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டார். ஆவணங்கள் அடிப்படையில் நான் இவ்வழக்கில் கூடுதலாக சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 15.02.2010-ம் தேதி மதுவிலக்கு காவல் நிலைய காவல் ஆய்வாளர் உள்ளிட்ட காவலர்கள் விடியற்காலை 04.00 மணிக்கு செய்யாறு - ஆரணி ரோட்டில் வடுகப்பட்டு கிராமம் அருகே தணிக்கை செய்தபோது TN 21 J 6355 என்ற டாட்டா டெம்போ வேனே மடக்கி சோதனை செய்தபோது அதிலிருந்து ஒருவர் மட்டும் பிடிபட்டார், மற்றவர்கள் தப்பி ஓடிவிட்டார்கள். அந்த வாகனத்தில் 35 லிட்டர் கொள்ளளவு கொண்ட 10 வெள்ளை நிற பிளாஸ்டிக் கேன்களில் சுமார் 350 லிட்டர் எரிசாராயம் இருந்தது.

3. எதிரியை பிடித்து விசாரிக்க அவரது பெயர் தெய்வசிகாமணி என்று சொன்னார். பின்னர், காவல் ஆய்வாளரால் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட எரிசாராயம், மகஜர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. எதிரி தெய்வசிகாமணி குற்றத்தை ஒப்புக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பின்னர், காவல் ஆய்வாளர் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 186/2010, சட்டப்பிரிவுகள் 4(1)(aaa) r/w. 4(1-A)(ii) TNP Act & 6 of RS Rules - ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அந்த முதல் தகவ்ல அறிக்கை - **அ.சா.ஆ.7**.

4. பின்னர், காவல் ஆய்வாளர் சாட்சிகள் பிரேமா, தியாகச்செம்மல், முனுசாமி, புன்னியகோட்டி, ராகவன் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கின் சாட்சிகள் முனுசாமி, புன்னியகோட்டி ஆகியோர்கள் முன்னிலையில் 15.02.2010-ம் தேதி சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். அந்த பார்வை மகஜர் - **அ.சா.ஆ.8**, மாதிரி வரைபடம் - **அ.சா.ஆ.9** ஆகும்.

5. பின்னர், இவ்வழக்கின் எதிரி தேசிகா (எ) தெய்வசிகாமணி என்பவரை திரேக பரிசோதனை செய்து 15.02.2010-ம் தேதியன்று செய்யாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு

உட்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் சென்றுள்ளார். வழக்கின் மற்ற எதிரிகளான பாலாஜி, பாலு ஆகிய இருவரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று பிணையில் சென்றுள்ளார்கள்.

6. பின்னர், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 350 லிட்டர் எரிசாராயத்தை 500 m.l. அளவுள்ள 20 பாட்டில்களில் எடுத்து வழக்கு சொத்துடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு C.P.No. 11/2010 பெறப்பட்டு இரசாயன பரிசோதனைக்காக வேலூர் மண்டல தடய அறிவியல் பரிசோதனை கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. பகுப்பாய்வு செய்ததில் கைப்பற்றப்பட்ட எரிசாராயத்தில் 6.1% அக்ரோட்டின் என்கின்ற நச்சு பொருள் கலந்துள்ளது என்றும், அவை எரிசாராயம் என்று நீதிமன்றத்திற்கு ஆய்வறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

7. பின்னர், காவல் ஆய்வாளர் இராசாயன பரிசோதனை செய்த வேலூர் மண்டல தடய அறிவியல் துறையை சார்ந்த திரு. ஜேம்ஸ் அந்தோணிராஜ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த ஆய்வறிக்கை ஏற்கனவே அ.சா.7-ன் மூலம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட படிவம் - 91 - **அ.சா.ஆ.10** ஆகும். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட TN 21 J 6355 வெள்ளை நிற டெம்போ வேன் ஆனது அரசுக்கு ஆதாரயம் பெறவேண்டி திருவண்ணாமலை மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அரசுக்கு ஆதாயம் செலுத்தப்பட்டது. பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்ட எரிசாராயம் போக மீதமுள்ள எரிசாராயம் நீதிமன்றத்தில் பாதுகாக்கும் வசதி இல்லை என்பதால் மீண்டும் காவல் துறையினரின் பாதுகாப்பில் வைக்க நீதித்துறை நடுவர் மூலம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு காவல் நிலைய பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. பின்னர், காவல் ஆய்வாளர் வெங்கடேசன் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 4(1)(aaa) r/w. 4(1-A)(ii) TNP Act & 6 of RS Rules - ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. சமபவம் நடந்த நேரம் அதிகாலை 04.00 மணி. நான் சொல்வதுபோல் சம்பவம் நடந்திருந்தால் தனிநபர்கள் சாட்சிகள் மூலம் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு செல்லாமல், சாட்சிகளை விசாரிக்காமல், ஆவணங்களை காவல் நிலையத்தில் தயார் செய்து எதிரிகள் மீது ஒரு பொய்யான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார், அதனை அனுசரித்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Signature of Witness

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.24 15:44:42 +0530

**Additional Subordinate Judge,**
**Cheyyar.**